தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994 மே 3, செவ்வாய்க்கிழமை
சித்திரை 20, பவ-திருவள்ளுவர் ஆண்டு 2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா : அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை."

சோர்வு இல்லாத அசைவற்ற ஊக்கம் உடையவர்களிடத்தில் ஆக்கமானது, அவர்கள் இருக்கும் இடம் தேடி, தானே வழி கேட்டுச் சென்று சேரும்,

I. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள். வினா எண் 481 டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு உணவு அமைச்சர்.

481—

வால்பாறை மலைப்பகுதியில் நடமாடும் நியாய விலைக் கடை அமைத்தல்.

*22795—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை மலைப்பகுதிகளில் நடமாடும் நியாயவிலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வால்பாறை மலைப் பகுதிகளில், 'டாப் ஸ்லிப்' கிளைக்கு ஒன்றும், வால்பாறை கிளைக்கு ஒன்றுமாக இரண்டு நடமாடும் ஊர்திகள் வழங்கப்பட்டு, 24—6—1993 முதல் நடமாடும் நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன,

[1994 மே 3

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடமாடும் நியாய விலைக் கடைகளை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வால்பாறை மலைப் பகுதியிலே குளிர் காலங்களிலும், மழைக்காலங்களிலும் பனிமூட்டங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலே, வன விலங்குகள் பகல் நேரத்திலேகூட குடியிருப்புகளுக்கு வருகின்ற காரணத்தாலே. 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டரிலே இருக்கக்கூடிய ரேஷன் கடைகளை எல்லாம் அறிந்து, நியாய விலைக் கடைகளை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மலைப் பகுதிகளுக்கு என்று இன்னும் இரண்டு நியாய விலைக் கடைகளை அமைத்துக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடமாடும் நியாய விலைக் கடைகள் என்பது மத்திய அரசின் திட்டத்திலேயிருந்து நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை தமிழகத்தில் 27 நடமாடும் நியாயவிலைக் கடைகள் பல்வேறு மாவட்டங்களிலே, பல்வேறு மலைப் பகுதிகளிலே நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், 15 ஊர்திகள் வாங்குவதற்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்று மத்திய அரசிடத்திலே கேட்டு இருக்கிறோம். அப்படி அனுமதிக் கப்படுகிறபோது, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்து கொள்கிறேன். இன்னும் அதிகமாக நியாய விலைக் கடைகளைத் தொடங்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அதைத்தான் நான் மானியக் கோரிக்கையிலே தெரிவித்திருக்கிறேன். முன்னாலே ஒரு கேள்விக்கும் பதில் அளித்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்னும் அதிகமான சிற்றூர்களிலும், குக்கிராமங்களிலும் கடைகளைத் தொடங்கு வதற்கு இயலுமா என்பதைப் பற்றி மிகுந்த தீவிரத்துடன் பரிசீலிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். துறை அதைப்பற்றிப் பரிசீலித்து வருகிறது.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதத்தினுடைய எல்லா நாட்களிலும், எல்லாத் தானியங்களையும் நியாய விலைக் கடைகளின் மூலமாகக் கொடுப்பதற்குண்டான அறிவுரையை அங்குள்ள அதிகாரிகளுக்குக் கொடுத்து, மேலும் தீவிரமாகச் செயல்படுத்துவதற்குக் உண்டான வழிமுறைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரத்திலே 6 நாட்கள்—விடுமுறை நாள் ஞாயிற்றுக்கிழமை தவிர அல்லது மற்ற வார விடுமுறை

1994 மே 3]

நாளைத் தவிர, 6 நாட்கள் இப்போது வழங்கப்பட்டு வருகின்றது. பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மலைப் பகுதிகளினுடைய மையமான ஒரு ஊரிலே கொண்டு போய், அந்த ஊர்தி நிறுத்தப்படுகிறது. அங்கே அந்தப்பகுதி மக்களுக்கு எல்லாம் குடும்ப அட்டைகளுக்குத் தானியங்கள், உணவு தானியங்கள், எல்லாப் பொருட்களுமே வழங்கப்பட்டு வருகின்றன. நாம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற தானியங்களைப் பொது விற்பனைக்காக நாம் வழங்குகின்ற தானியங்களை அவைகள் விற்கும். இதைத் தவிர, மற்றவற்றை விற்க வேண்டுமானால், அதைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால், அந்தத் துறைக்குப் பொறுப்புள்ள அமைச்சர் பதில் வழங்குவார்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 482, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

482—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

*21424—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், 58 புதுக்குடி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு அனுமதியளித்தும், துவங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைத்திறந்திட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 58. புதுக்குடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு அனுமதி கொடுக்கவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற அந்த 58. புதுக்குடி கிராமத்தைப் பொறுத்தவரையில் அங்கேயிருக்